MC.23/2024

25.11.2025

PW2 – சின்னசாமி த/பெ.சென்றாய கவுண்டர், வயது–70

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் –03.13 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –03.55 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 25.11.2025

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

உங்கள் மகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் மாதம், மாதம் என் மகளுக்கு பணம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். உங்கள் மகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் அதற்கு எதிர்மனுதாரர் என்ன எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரிந்துகொண்டேன். உங்களுடைய மருமகன் தாக்கல் செய்துள்ள எதிருரையில் என்ன சங்கதி சொல்லியுள்ளார்

என்றால் மாதம், மாதம் பணம் தரமுடியாது என்று சொல்லியுள்ளார். நீங்கள் என்ன பணி செய்து ஓய்வுபெற்றுள்ளீர்கள் என்றால் வருவாய் துறையில் நில அளவையராக பணி செய்து ஓய்வு பெற்றுவிட்டேன். உங்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் எவ்வளவு என்றால் ரூ.25,000/-. உங்கள் மனைவி என்ன வேலை செய்தார் என்றால் அரசு பள்ளியில் ஆசிரியராக பணி செய்து ஓய்வு பெற்றுவிட்டார். உங்கள் மனைவியின் மாதாந்திர ஓய்வூதியம் எவ்வளவு என்றால் ரூ.30,000/-. உங்கள் மகன் உங்களுடன் தான் இருக்கிறாரா என்றால் இல்லை அவர் அரசு பள்ளியில் ஆசிரியராக பணி செய்கிறார். உங்கள் மகளுக்கும் மருமகனுக்கும் நடைபெற்ற திருமணம் பெரியோர்கள் ஏற்பாடு செய்த திருமணம் என்றால் சரிதான். திருமணத்திற்கு உங்களுடைய மகளின் விருப்பம் இருந்ததா அதை கேட்டு தெரிந்துகொண்டீர்களா என்றால் என் மகளின் விருப்பத்தின் பேரில் தான் திருமணம் செய்யப்பட்டது. உங்கள் மகளை பெண் பார்க்க வரும்போது உங்கள் மருமகனிடம் மாப்பிள்ளை 10 கி.மீ தூரத்திற்குள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதித்தீர்களா என்றால் இல்லை. உங்களுடைய மகள் கணவர் வீட்டில் வேலை செய்ய முடியாது என்று சொல்லியதற்கு நீங்கள் உங்கள் மகளிடம் மேற்படி கணவர் வீட்டில் வேலை செய்ய தேவையில்லை அங்கு வேலை ஆட்கள் உள்ளார்கள் என்று சொல்லி நீங்கள் தான் உங்கள் மகளை திருமணம் செய்துகொள்ள சம்மதிக்க வைத்தீர்கள் என்று சொன்னால் இல்லை. திருமணத்தின்போது உங்கள் மகளுக்கு நீங்கள் போட்ட நகைகள் உங்கள் வீட்டில் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். திருமணத்தின்போது ஏற்பட்ட செலவினங்களை நீங்களும்

மாப்பிள்ளை வீட்டாரும் சரிசமமாக பங்கேற்றீர்கள் என்று சொன்னால் சரிதான். திருமணத்தின் முன்பு உங்களுடைய மகள் திருப்பத்தூர் தூய நெஞ்சக கல்லூரியில் பேராசிரியராக வேலை செய்வதாக சொல்லி தான் திருமணம் செய்து கொடுத்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. திருமணத்தின்போது உங்களுடைய மகள் என்ன வேலை செய்தார் என்றால் வசந்தம் மெட்ரிக்குலேசன் பள்ளியில் இரண்டு மாதம் ஆசிரியராக பணி செய்தார். உங்களுடைய மகள் தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் வேலைக்காக தேர்வு எழுத படித்து வந்தாரா என்றால் ஆமாம் படித்து வந்தார். திருமணத்திற்கு பின்பு எத்தனை முறை நீங்கள் மருமகன் வீட்டிற்கு சென்றிருப்பீர்கள் என்றால் இரண்டு முறை சென்றிருப்பேன். அப்போது உங்களுடைய மகள் உங்களிடம் எந்த குறையும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எவ்வளவு காலம் உங்கள் மகள் கணவர் வீட்டில் நல்ல முறையில் வாழ்ந்து வந்தார் என்றால் மூன்று மாதங்கள். உங்கள் மகள் மீது உங்களுடைய மருமகன் நீங்கள் அவர் வீட்டிற்கு சென்றபோது அல்லது எப்போதாவது குறை ஏதேனும் சொன்னாரா என்றால் இல்லை. உங்களுடைய மகள் மருமகனுடன் சரியாக வாழவில்லை என்று உங்கள் மருமகன் உங்களிடம் சொன்னார் எனவும் நீங்கள் வழக்கிற்காக வேண்டி பொய்யான சங்கதி சொல்லுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு உங்கள் மகள் எத்தனை முறை மேட்டுப்பாளையத்திலிருந்து உங்கள் வீட்டிற்கு வந்தார் என்றால் தேர்வு எழுதுவதற்கு இரு முறையும் பொங்கல் பண்டிகைக்காக இருமுறையும் வந்தார். உங்கள் மகள் கடைசியாக கடந்த 2022 பிப்ரவரி மாதம் ஆசிரியர்

தேர்வாணை தேர்வு எழுதுவதாக சொல்லி உங்கள் வீட்டிற்கு வந்தார் என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு உங்களுடைய மகள் அவருடைய கணவர் வீட்டிற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரிதான். கடந்த 2022 ஏப்ரல் மாதம் உங்கள் சம்மந்தி உங்கள் மகளை அழைத்துச்செல்ல உங்கள் வீட்டிற்கு வந்தார் என்று சொன்னால் அன்றைய தினம் என்னுடைய சம்மந்தி வந்தார் ஆனார் என் மகளை அழைத்துச்செல்லவில்லை. உங்கள் மகளுக்கு அவருடைய கணவர் வீட்டில் இருந்த வரையிலும் எவ்வித வரதட்சணை கொடுமை எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் ஏற்படவில்லை. கடந்த 28.08.2022 அன்று மேட்டுப்பாளையத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உங்கள் மகளை அழைத்துச் சென்று பஞ்சாயத்து பேசினீர்கள் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு பேசியதில் என்ன முடிவு எட்டப்பட்டது என்றால் எங்களது தரப்பில் வாழவேண்டும் என்று சொன்னோம் எங்களது மருமகன் தரப்பில் வாழ முடியாது என்று சொல்லிவிட்டார்கள். போலீசார் தரப்பில் வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை எனவும் எந்தவித தவறும் கண்டுபிடிக்காத காரணத்தினால் தான் அனைவரையும் திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். பின்னர் உங்கள் மகள் உங்களிடமே வந்துவிட்டார் அதன் பிறகு வேலைக்கு ஏதேனும் உங்கள் மகள் சென்றாரா என்றால் இல்லை படித்துக்கொண்டு வருகிறார். அதன் பிறகு சட்ட நடவடிக்கையை உங்கள் மகள் மற்றும் மருமகன் பிரச்சனை தொடர்பாக யார் தரப்பில் எடுத்தார்கள் என்றால் நாங்கள் தான் சட்ட நடவடிக்கையை முதலில் எடுத்தோம். உங்கள் மகளுக்கும் உங்கள் மருமகனுக்கும் நடைபெற்ற திருமணம் சட்டப்படி

செல்லாது என்று மேட்டுப்பாளையம் சார்பு நீதிமன்றத்தில் HMOP.97/2024 எதிர்மனுதாரர் தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் சரிதான். HMOP.97/2024 வழக்கின் அழைப்பாணையை உங்கள் மகள் பெற்ற பிறகு தான் இந்நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கோரி உங்கள் மகள் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. 18.07.2024 அன்று HMOP.97/2024 மேட்டுப்பாளையம் சார்பு நீதிமன்றத்தில் உங்கள் மருமகன் தாக்கல் செய்த பின் தான் இவ்வழக்கினை 12.08.2024 அன்று உங்கள் மகள் ஜீவனாம்சம் கோரி உங்கள் மருமகனுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. HMOP.97/2024 என்ற வழக்கில் உங்கள் மருமகன் மற்றும் மகளுக்கிடையே தாம்பத்திய உறவு ஏற்படவில்லை என்று நீங்கள் உங்கள் மருமகனை ஏமாற்றி உங்கள் மகளை திருமணம் செய்து வைத்தீர்கள் என்று சொல்லியுள்ளார் என்று சொன்னால் அது தவறான சங்கதியாகும். HMOP.97/2024 மேட்டுப்பாளையம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கானது உங்கள் மகள் தரப்பில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கானது மாற்றலாகி நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். உங்கள் மகள் மனைவி என்ற கடமையை உங்கள் மருமகனுக்கு நிறைவேற்றவில்லை எனவும் அவர்களுக்கிடையே தாம்பத்திய உறவு எதுவும் ஏற்படவில்லை எனவும் அதன் காரணமாக உங்களுடைய மகள் ஜீவனாம்சம் பெற தகுதியற்றவர் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் மருமகனுக்கு என்ன சொத்து இருக்கின்றது என காட்டுவதற்கும் அவருடைய வருமானத்தை

காட்டுவதற்கும் ஆவணங்கள் எதுவும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் உங்களுடைய மருமகனின் மாத ரூ.75,000/– வருமானம் குறித்து எதை வைத்து முடிவு செய்தீர்கள் என்று சொன்னால் பெண் பார்க்க வரும்போது ரூ.50,000/– மாத வருமானம் என்று சொன்னால் அதன் அடிப்படையில் நான் அவருடைய மாத வருமானம் ரூ.75,000/– என அனுமானத்தின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன். உங்களுடைய மருமகனின் மாத வருமானம் ரூ.22,300/– என்று சொல்லுகிறார் என்று சொன்னால் தவறான சங்கதியாகும். உங்கள் மருமகனின் அம்மாவிற்கு மார்பக புற்றுநோய் மற்றும் சிறுநீரகம் பழுதடைந்த காரணத்தினால் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டும் டயாலிசிஸ் சிகிச்சை மேற்கொண்டு வருகிறார் என்றால் சரிதான். உங்கள் மருமகன் அவரின் தாயார் மருத்துவ செலவுக்காக மாதம் ரூ.14,000/– செலவு செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு திருப்பத்தூரில் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் சொந்த வீடு உள்ளதா என்றால் என் மனைவி பெயரில் உள்ளது. கந்திலி பிரதான சாலையில் கடை கட்டி வாடகை பெற்று வருகிறீர்கள் என்றால் தவறு. புளியம்பட்டியில் எட்டு ஏக்கர் சொத்தில் மாந்தோப்பு இருந்ததா என்றால் இருந்தது அதை அண்ணன், தம்பிகளாகிய நாங்கள் பிரித்துக்கொண்டோம். நீங்கள் உங்கள் மகளை பார்த்துகொள்வதற்கான அனைத்து வசதிகளும் பெற்றுள்ளீர்கள் என்று சொன்னால் எங்களுடைய ஓய்வூதியம் எங்களுக்கே சரியாக உள்ளது. உங்கள் மகள் திருமணமாகி எந்தவித பணிவிடை, கடமை, தாம்பத்திய உறவு இல்லாத காரணத்தினால் உங்கள் மகள் எவ்வித ஜீவனாம்ச தொகையும்

உங்கள் மருமகனிடமிருந்து பெறுவதற்கு அருகதையற்றவர் என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct. M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2025.11.25 18:08:37 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.